# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII code of Criminal Procedure)

## IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR

## SESSIONS CASE NO. 210/2018

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution **PW 4** |
| | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : **மருதய்யா** |
| Father / Husband Name | : **கருத்தபாண்டி** |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of **24th day of November, 2025.**

**(A 1-3 are absent. Petition filed and allowed.)**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**முதல் விசாரணை :**

நான் தற்போது சோழர்புரம் திருநெல்வேலி மாவட்டத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது லாரி டிரைவராக பணிபுரிந்து வருகிறேன். 13.06.2018 ம் தேதி ஜே.பி

ரோட் வேஸ் செம்மரம்பாக்கத்தில் நான் லாரி டிரைவராக பணிபுரிந்து வந்த போது பகல் 12.00 மணியளவில் நசரத்பேட்டையை சேர்ந்த காவல் ஆய்வாளர் ஜேபி ரோட் வேஸ் அலுவலகத்திற்கு வந்து வரைபடம் வரைந்தார்கள். முதல் நாள் இரவு அந்த இடத்தில் சண்டை நடந்ததாக கேள்விபட்டேன். லோக்கலில் உள்ள ஆட்கள் வந்து அலுவலக கண்ணாடியை உடைத்தார்கள் என்றும் லாரியின் கண்ணாடியை உடைத்தார்கள் என்றும் கேள்விப்பட்டேன். அதற்காக வரைபடம் வரைந்து அதற்கான மகஜரில் கையொப்பம் இட்டேன். பார்வை மகஜரிலுள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். அதற்காக தயார் செய்யப்பட்ட **பார்வை மகஜர் அ.த.சா.ஆ. 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

நான் கையொப்பமிட்ட கடிதம் போலீசார் ஏற்கனவே தயார் செய்யப்பட்டிருந்தது என்றால் எனக்கு படிக்க தெரியாது அலுவலகத்தில் வைத்து கையொப்பம் வாங்கினார்கள் அது எழுதியிருந்ததா அல்லது டைப் செய்யப்பட்டிருந்ததா என்று எனக்கு ஞாபகமில்லை. அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

**மறுவிசாரணை இல்லை.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 210/2018**

| Deposition of Witness for | Prosecution **PW 5**<br>Defence<br>Court |
|---|---|

Name : செல்லதுரை

Father / Husband Name :

Village :

Taluk :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of **24th day of November, 2025.**

**(A 1-3 are absent. Petition filed and allowed.)**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**முதல் விசாரணை :**

நான் தற்போது சங்கரன்கோவில் திருநெல்வேலி மாவட்டத்தில் வசித்து வருகிறேன். நான் லாரி டிரைவராக பணிபுரிந்து வருகிறேன். 13.06.2018 அன்று நான் ஜேபி ரோட் வேஸ் லாரி டிரைவராக பணிபுரிந்து வந்தேன். நான் வேலை

விஷயமாக 1.00 க்கு சொந்த வேலையாக மோட்டார் சைக்கிளில் திருமழிசை சிக்னல் அருகே சென்றேன். போலீசார் 2 பேரை விசாரித்துக்கொண்டிருந்தார்கள். ஜேபி ரோட் வேஸ் முன்பாக 12.06.2018 அன்று சண்டை போட்டதாக சொன்னார்கள் வண்டி மீது கல் எரிந்ததாகவும் அலுவலக கண்ணாடி மீது கல் எரிந்ததாகவும் கூறினார்கள் அதற்கு சாட்சியாக என்னை இருக்க கூறினார்கள். பின்னர் என் முன்பு கல், கட்டை, கண்ணாடி துண்டுகளை எடுத்தார்கள். என்னிடம் தற்போது காண்பிக்கப்படும் உருட்டு கட்டை, கருங்கல், கண்ணாடி ஆகியவற்றை போலீசார் என் முன்னிலையில் கைப்பற்றினார்கள். அவற்றை கைப்பற்றியதற்காக மகஜர் தயார் செய்து என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். என்னுடன் கருத்தபாண்டி என்பவரிடமும் கையொப்பம் வாங்கினார்கள். முதலாம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. உருட்டு கட்டை, கருங்கற்களை **கைப்பற்றிய மகஜர்** முறையே **அ.த.சா.ஆ.4 மற்றும் 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. உருட்டு கட்டை **அ.சா.பொ. 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கருங்கற்கள் அ.சா.பொ. 2 வரிசையாக (2 எண்ணிக்கைள்) குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் ஜேபி ரோட் வேசில் லாரி டிரைவராக நிரந்தரமாக பணியில் இருந்தேனா என்றால் வேலை இருந்தால் கூப்பிடுவார்கள் நான் வந்து வண்டி ஓட்டிவிட்டு பின்னர் லீவில் இருப்பேன். என்னுடைய வருகை பதிவேட்டில் பதிவாகியிருக்கும் என்றால் சரிதான். 13.06.2018 தேதியன்று நான் அங்கு தான் தங்கியிருந்தேனா என்றால் ஜேபி ரோட் வேசில் தான் இருந்தேன். என்னுடன் மருதய்யா, கருத்த பாண்டியன் ஆகியோர் இருந்தார்களா என்றால் அவர்கள் என்னுடன் தான் பணிபுரிந்தார்கள். அன்றைய தினம் கருத்த பாண்டியன் என்னுடன் இருந்தார். மருதய்யா இல்லை. மருதய்யா என்பவர் என்னுடைய பக்கத்து ஊர்காரர். போலீசார் தயார் செய்யப்பட்ட படிவத்தில் கையொப்பமிட்டேன் அதில் யார் யாரிடமிருந்து என்ன கைப்பற்றினார்கள் என்று முழு விவரங்கள் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. கம்பெனி மேனேஜர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க

சாட்சியமளிக்கிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் உண்மையாக என்ன நடந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. மறுநாள் காவல் துறையினர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரிதான். போலீசார் தயார் நிலையில் கைப்பற்றிய பொருட்களை நான் பார்த்து ஆவணங்களில் கையொப்பம் இட்டேன் என்றால் சரியல்ல. ஜேபி ரோட் வேஸ் – க்கு இணங்க சாட்சியமளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.